[1975 மார்ச் 19]

Moral instruction classes in schools

373—THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state:

(a) whether it is a fact that imparting moral instruction in the schools has been dispensed with; and

(b) if so; tne resons therefor?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, இப்போது மாணவர்களிடையே ஒழுக்கம் அவசியமாகத் தேவைப்படுகிறது. பெரும்பாலான இடங்களிலே மாணவர்களிடத்திலே ஒழுக்கம் கெட்டு வருகிறது என்று வெளியிலே பேசப்படுகிறது. ஆகவே பள்ளிக்கூடங்களிலே வாராவாரம் ஒழுக்கத்தைப்பற்றி மாணவர்களுக்கு அறிவுரைகள் கூறுவதற்கு, அதைப் பற்றி பேசுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது வாரத்திலே ஒரு பீரியட் ஒழுக்கக் கல்விக்கென்று ஒதுக்கப்படுகிறது. இதிலே ஒழுக்கம் சம்பந்தமான பல்வேறு அறிவுரைகளை ஆசிரியர்கள் வழங்குகிறார்கள். அதுமட்டும் அல்ல, ஒழுக்கநெறியைக் கற்பிக்கக்கூடிய வல்லமைபடைத்த பெரியவர்கள் என்று குறிப்பிடப்பெறுகிறவர்கள் அழைக்கப்பெற்று அவர்களும் மாணவர்களிடையே அறிவுரைகளை வழங்கச் செய்ய ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

திரு. பெ. சௌந்திரபாண்டியன்: தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளிலே ஒழுக்க வகுப்பு என்று வைப்பது ஏதோ மாணவர்கள் மத்தியில் ஒழுக்கம் இல்லை என்கிற நிலைமையை ஏற்படுத்ாதா? ஆகவே, இந்த வகுப்பை வேறு நேரத்திலே வைத்துக் கொள்ளலாம், இப்போது ஒரு பீரியட் வைத்திருப்பதை எடுத்துவிடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதை இன்னும் அதிகமாக்க வேண்டுமென்ற கருத்துத்தான் பலருக்கு இருக்கிறது. ஒழுக்கம் இல்லை என்பதல்ல. ஒழுக்கத்தை சீர்படுத்தவும், ஒழுக்கத்தை மேம்படுத்தவும் இது தேவைப்படுகிறது. ஏற்கெனவே ஒழுக்கத்தின் தரம் குறைந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். இளமையிற் கல் என்பதற்கு இணங்கவும், தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பதற்கு இணங்கவும் அடிப்படைக் கல்வி பயிற்றுவிக்கும்போதே ஒழுக்கத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலேதான் அப்படிச் செய்தால்தான் அவர்களின் எதிர்காலம் செம்மையாக இருக்கும். இப்போது வாரத்திற்கு ஒரு பீரியட் அதற்காக ஒதுக்கப்பட்டு சொல்லித்தரப்படுகிறது.